பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
25 12 2024 **WEDNESDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் வளர்ச்சிப் பணிகள் கடந்த ஓராண்டில் வேகம் அடைந்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் பன்னோக்கு சேவை மையங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

- வருங்கால சந்ததியினருக்கு ஊக்கமளிக்கும் வகையில் வீரத்துடன் திகழ்ந்தவர் வேலுநாச்சியார் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

- தமிழகத்தின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக, முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி ஆற்றிய பணிகள் எப்போதும் நினைவுகூரப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

- அஹமதாபாத் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

நாட்டில் வளர்ச்சிப் பணிகள் கடந்த ஓராண்டு காலத்தில் வேகம் அடைந்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம், கஜுராஹோவில் இன்று, நாட்டின் முதலாவது நதிநீர் இணைப்புத் திட்டமான Ken-Betwa திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, அவர் உரையாற்றினார்.

முன்னாள் பிரதமர் பாரத்ரத்னா அடல் பிஹாரி வாஜ்பேயின் பிறந்த நாள், நல்லாட்சி தினமாக கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர், நல்லாட்சி தான் பிஜேபியின் அடையாளம் என்றார்.

காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகள் ஆட்சி நடத்திய மாநிலங்களை விட பிஜேபி ஆட்சி நடத்தும் மாநிலங்கள், முந்தைய சாதனைகள் அனைத்தையும் முறியடித்து மக்கள் நலன் மற்றும் வளர்ச்சியில் பெரும் வெற்றி பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

பிஜேபி அரசு மக்கள் நலனுக்காக எந்த அளவிற்கு அர்ப்பணிப்புடன் பாடுபடுகிறது என்பதை இந்த நாடு பார்த்துக் கொண்டிருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவுகளை நனவாக்க, அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கான அரசியல் சாசன சிற்பி அம்பேத்கரின் தொலைநோக்குத் திட்டங்களை காங்கிரஸ் கட்சி மதிக்கத் தவறிவிட்டதாகவும் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

மத்தியில் பிஜேபி ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் பன்னோக்கு சேவை மையங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பால்வள, மீன்வள கூட்டுறவு சங்கங்கள் உட்பட 10 ஆயிரம் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை தொடங்கி வைத்து, அவர் பேசினார்.

பிஜேபி ஆட்சிக்கு வந்தவுடன் இரண்டு லட்சம் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை தொடங்க முடிவு செய்யப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், நாட்டில் உள்ள அனைத்து பஞ்சாயத்துக்களிலும் கூட்டுறவு சங்கங்களின் சேவை சென்றடைவதாக தெரிவித்தார்.

உணவு தானிய சேமிப்பு, உர விற்பனை, எரிவாயு விநியோகம் தண்ணீர் விநியோகம் போன்ற பல்வேறு சமுதாய சேவைகளை ஆற்றும் மையங்களாக கூட்டுறவு சங்கங்கள் திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

ரயில் மற்றும் விமான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யும் வசதியும் கூட்டுறவு சங்கங்களில் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

அடிமட்ட அளவில் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கான வளர்ச்சியடைந்த பஞ்சாயத்து கர்மயோகி திட்டத்தை மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் இன்று தொடங்கி வைத்தார்.

நல்லாட்சி தினத்தை ஒட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு போதிய பயிற்சி அளிப்பதன் மூலம், பஞ்சாயத்துகளின் திறமையை மேம்படுத்தி போட்டித் திறனை அதிகரிக்க முடியும் என்றார்.

நல்லாட்சிக்கான சீர்திருத்தங்கள் அடிமட்ட அளவிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய திரு. ஜிதேந்திர சிங், புதிதாக தொடங்கப்பட்டுள்ள கர்மயோகி திட்டம், கிராமப் பகுதிகளை வளர்ச்சியின் பிரதான நீரோட்டத்துடன் இணைக்கும் என்றும் தெரிவித்தார்.

>>>>><<<<<

சிவகங்கை சீமையை ஆண்ட வீரமங்கை வேலுநாச்சியாரின் நினைவு தினத்தை ஒட்டி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்தியாவை சூழ்ந்த கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடிய முதல் பெண் சுதந்திரப் போராட்ட வீராங்கனை வேலுநாச்சியார் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை காக்கும் போரில் பெண்களும் போரிடலாம் என்பதற்கு சான்றாய் விளங்கியதுடன், ஆங்கிலேயருக்கு எதிராக படை திரட்டி வீரமுடன் போரிட்டவர் என்றும் அவர் கூறியுள்ளார்.

தனது திறன்மிகுந்த படை பலத்துடன், அந்நியர்களை வெற்றி கொண்டு சிவகங்கை சீமையின் முதல் ராணியாக முடிசூட்டப்பட்ட ராணி வேலுநாச்சியார், வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில், வீரம் செறிந்த வரலாறாய் வாழ்ந்தவர் என்றும் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம், புதுதில்லியில் இன்று பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. ஜெ.பி. நட்டா தலைமையில் நடைபெற்றது.

இதில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, தெலுகு தேசம் கட்சித் தலைவர் திரு. சந்திரபாபு நாயுடு, மதச்சார்பற்ற ஜனதா தள கட்சியின் திரு. குமாரசாமி, ஐக்கிய ஜனதா தள கட்சியின் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங், அப்னாதள் கட்சியின் திருமதி. அனுப்ரியா பட்டேல் உள்ளிட்ட தலைவர்கள் பஙகேற்றனர்.

இந்தக் கூட்டத்தில், கூட்டணி கட்சிகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

>>>>><<<<<

தமிழகத்தின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக, முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயி ஆற்றிய பங்களிப்புகள் எப்போதும் நினைவுகூரப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வாஜ்பேயின் 100வது பிறந்த நாளையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமர் பொறுப்பில் இருந்த போது நாட்டின் மதச்சார்பின்மை பண்பை பேணிக்காத்தவர் என புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது வாழ்வும், பணியும் என்றும் நிலைத்து நிற்கும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

மதுரை மாவட்டம், அரிட்டாபட்டி, நாயக்கர்பட்டி சுற்றுவட்டார கிராமங்களில் டங்ஸ்டன் வெட்டி எடுப்பதற்கான சுரங்க ஒதுக்கீட்டை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், பல்லுயிர் பெருக்கம் அதிகம் உள்ள இப்பகுதியில் சுற்றுச்சூழல் நலன் கருதியும், பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும் சுரங்க ஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும் என மத்திய சுரங்க அமைச்சகத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளையில், சுரங்கம் தொடர்பாக மறு ஆய்வு நடத்துவதென்ற மத்திய அரசின் முடிவு மகிழ்ச்சி அளிப்பதாகவும் திரு. துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்திலிருந்து கனிம வளங்கள் கடத்தப்படுவதை தடுக்க மாநில அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ஒரே எண் கொண்ட லாரிகளில் கனிம வளங்கள் கடத்தப்படுவதாக குற்றம் சாட்டினார்.

இந்த விவகாரத்தில் மாநில முதலமைச்சர் அக்கறை காட்டவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் மணவாளக்குறிச்சி தாதுமணல் எடுக்கும் திட்டம் குறித்த கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தமிழக அரசு அனுமதி அளிக்கக்கூடாது என்றும் திரு. அன்புமணி கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

தமிழகத்தில் வடகடலோர மாவட்டங்களின் ஒருசில இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 50 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

பாம்பன் புதிய ரயில் பாலப் பணிகளை மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் திரு. சரத் ஸ்ரீவஸ்தவா இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். செங்குத்து தூக்கு பாலத்தை இயக்கியும் அவர் சோதனை நடத்தினார்.

>>>>><<<<<

அஸ்ஸாமில் பணியில் இருந்த போது, வாகன விபத்தில் உயிரிழந்த மதுரையைச் சேர்ந்த ராணுவ வீரரின் உடல், அவரது சொந்த ஊரான எம்.எஸ். புரத்தில் துப்பாக்கி குண்டுகள் முழங்க இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

>>>>><<<<<

கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு. சிபி ஆதித்யா செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையை அடுத்த எலவனாசூர்கோட்டையில் காவல்துறையினர் நடத்திய சோதனையில் குட்கா, ஹான்ஸ் உள்ளிட்ட சுமார் 7 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தடை செய்யப்பட்ட போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

**>>>>><<<<<**

அஹமதாபாதில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 6-1, 6-3 என்ற செட்கணக்கில் லக்ஷ்மி பிரபாவை வென்றார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சீல் தேசாய், ராஜேஸ்வரன் ரேவதி, அகான்ஷா திலிப் ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Sejal Gopal – Khushali Modi, Akanksha Dilip – Soha Sadiq இணைகளும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

**>>>>><<<<<**

சந்தோஷ் கோப்பை கால்பந்து போட்டியில் ஒடிஷா, மேற்குவங்கம், தில்லி, மணிப்பூர், மேகாலயா, கேரளா, ஜம்மு காஷ்மீர், சர்வீசஸ் அணிகள் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

**>>>>>END<<<<<**